போது இன்னார் இன்னார் வேளாண்மைப்படுத்திய நிலத்தை அழித்திருக்கிறார்கள், இன்னார் இன்னார் வேளாண்மைப் படுத்திய நிலத்தை அனுமதித்திருக்கிறார்கள் என்று தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு .எல். இளையபெருமாள்: அமைச்சர் அவர்களுக்கு நன்றி, வாலாஜா ஏரியில் 'ஏ' பிரிவில் பயிரிட்டதை அவர்கள் அழித்து 'பி' பிரிவில் மகசூலை அறுக்கும்படி செய்தது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே வருங்காலத்தில் அதிகாரிகள் நியாய உணர்வோடு பயிர்களை அழிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அதேபோல் தண்ணீர் பிடிக்காத பகுதிகளை, நீர்ப்பிடிப்பு இல்லாத பகுதிகளை பட்டா செய்துகொடுக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நீதி தராசு முறைபில் வழங்கவேண்டும் என்றுதான் இந்த அரசு கருதுகிறது. எங்களுடைய பாரம்பரியம்—முதலில் தராசுதான் எங்கள் சின்னமாக இருந்தது என்பது உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். ஆகவே எங்கேயாவது அநியாயம் நடந் திருந்தால் அதைப் பற்றித் தெரிவித்தால் அதைக் கண்டிக்கவும் மீண்டும் அப்படிப்பட்ட காரியங்கள் நடக்காமலிருப்பதற்கும் இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளும்.

திருவில்லிபுத்தூர் தொகுதி திருவண்ணாமலை கிராமத்திலுள்ள புஞ்சை நிலத்தை 'நத்தமாக' மாற்றும் திட்டம்

*வினா எண் 1050 திரு இரா தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா.

திருவில்லிபுத்தூர் தொகுதி திருவண்ணாமலை கிராமப் பொதுமக்கள் குடியிருக்கும் ச. எண் 530/ஏ4 ஏ1சி புஞ்சை நிலத்தை நத்தமாக மாற்றும் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு. திரு. எஸ், டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறபடி சர்வே எண் 530 என்பதற்குப் பதிலாக 530—4(ஏ) 4 (1) என்று தான் அங்கிருக்கிறது. 42 பேர்கள் குடியிருக்கிறார்கள். அது புன்செய் நிலம்,

திரு. இரா. தாமரைக்கனி : திருவில்லிபுத்தூர் தொகுதி திருவண்ணாமலை கிராமத்தில் 530/ஏ4 குடியிருப்பில் இருப் பவர்கள் ஏழை எளிய மக்கள், பிற்பட்ட வகுப்பு மக்கள். அடித்தளத்திலிருக்கிற மக்கள். அவர்கள் வீடற்றவர்கள், ஆகவே ஏழை எளிய மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து கொடுப்பது போல் இது தனியார் நிலமாகயிருப்பதால் இந்த பிற்பட்ட மக்களுக்கும் அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து அந்த வீடு இல்லாத மக்களுக்குப் பட்டா கொடுக்க ஆவண செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி இது தனியாருடைய பட்டா, புன்செய் நிலம். தனியாருடைய பட்டா நிலத்தில் அவர்கள் குடியிருக்கிறார்கள். இவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் அல்ல. இவர்கள் நாயக்கர் வகுப்பை, பிள்ளை வகுப்பை, தேவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். இன்றிருக்கிற அரசின் கொள்கைப்படி தாழ்த்தப் பட்ட மக்களுக்குத்தான் அரசு விலைக்கு வாங்கிக்கொடுக்கும். அரசு நிலமென்றால் கொடுக்சலாம். ஆனால். மற்றவர்கள் நிலத்தில் இருக்கும்போது அரசு அந்த நிலங்களை வாங்கிக் கொடுக்க இயலாது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: இம்மாதிரி ஹரிஜனங்கள் அல்லாத பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு குடியிருப்புக்காக நிலங்கள் ஆர்ஜிதம் செய்து கொடுக்க உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அரசாங்கக் கொள்கை இன்று அல்ல தொன்றுதொட்டு இருந்துவரும் கொள்கை என்னவென்றால் ஆதிதிராவிட மக்களுக்கு மட்டும் அரசாங்க நிலங்களைக் குடியிருப்பிற்காகக் கொடுத்தும், அரசாங்க நிலங்கள் அல்லாத நிலங்களையும் அரசாங்கம் விலைக்கு வாங்கிக்கொடுக்கும். ஆனால் ஆதிதிராவிட மக்கள் அல்லாத மக்களுக்கு அவர்கள் ஏழைகளாக இருந்தால் அவர் களுக்கு அரசாங்க நிலம் கிடைத்தால் கொடுக்கும், அரசாங்க நிலத்தில் குடியிருந்தால் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப் பேற்றதற்குப் பிறகு எத்தனை ஏழை எளிய மக்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்பு கிறேன்-

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பொதுக் கேள்வி. லட்சக்கணக்கான பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்,

கேள்வி எண்கள் 1051 முதல் 1053 வரை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

சதுரங்கப்பட்டணம், புதுப்பட்டணம் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 1054 **திரு. கோ. ஆனூர். ஜெகதீசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்பாக்கம் அணுமின் திட்டத்தை அடுத்துள்ள சதுரங்கப்பட்டணம், புதுப்பட்டணம் ஆகிய இரு பகுதிகளுக்கும் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் நிறைவேற்றப் படும்?